மக்கள்: ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

நாள்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 6 ஞாயிற்றுக்கிழமை (22-08-1993) UTHAYAN—A Lively National Tamil Daily இதழ் 267

மேலும் மூன்று நீதிமன்றங்கள் விரைவில் இயங்க தொடங்கும்

மேன் முறையீடு செய்யவும் வசதி

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 22

சுன்னாகத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ள தமிழீழ நீதிமன்றத்தை விட மேலும் மூன்று நீதிமன்றங்கள் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய இடங்களில் விரைவில் திறக்கப்படும்.

நீதிமன்றத் தீர்ப்புகளில் திருப்தி அடையாதவர்கள் மேன்முறையீடு செய்வதற்கு வசதியாக குடாநாட்டில் ஒன்றும் வன்னியில் ஒன்றுமாக இரண்டு மேல் நீதிமன்றங்கள் அமைக்கப்படும்.

குடாநாட்டில் நீதிமன்றங்கள் நிறுவி முடிக்கப்பட்டதும் வன்னி நீதிமன்றங்களை அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

நீதிநிர்வாகப் பொறுப்பாளர் திரு. பரா நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இத்தகவல்களைத் தெரிவித்தார்.

சுன்னாகம் நீதிமன்றம் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்ட பின்னர் நீதியாளர்கள் அறையில் செய்தியாளர் மாநாடு நடைபெற்றது. நீதியாளர்கள் மூவரும் அப்போது பிரசன்னமாகினர்.

செய்தியாளர் மாநாட்டில் வைத்து நீதிநிர்வாகப் பொறுப்பாளர் வெளியிட்ட ஏனைய முக்கிய தகவல்கள் வருமாறு:-

★ தமிழீழ நீதிமன்றங்களில் வழக்கில் சம்பந்தப்பட்டோர் தாங்களே தங்களுக்காக வாதாடலாம்.

★ பண வசதி இல்லாத மக்களுக்காக சட்டவாளர்கள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

பி. பி. ஸி. செய்தியாளரும் வந்திருந்தார்

பி. பி. ஸியின் இலங்கைச் செய்தியாளர் திரு. ஷிபாக்கா நூஸ்யாழ்ப்பாணம் வந்துள்ளார் இவருடன் பி.பி.ஸியின் தொலைக்காட்சிப்படப் பிடிப்பாளர் ஒருவரும் வந்துள்ளார் நேற்று நடைபெற்ற நீதிமன்ற திறப்பு விழாவுக்கு இவர்கள் வந்திருந்தனர்.

பான்ட் வாத்தியம் முழங்க நீதிமன்றம் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், ஆக. 22

யாழ். மாவட்ட நீதிமன்று நேற்று காலை 10 மணியளவில் உடுவிலில் திறந்து வைக்கப்பட்டது. விடுதலைப்புலிகளின் நீதி – நிர்வாகத் துறையினரால் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது நீதிமன்று இதுவாகும்.

காலை பத்து மணிக்கு விழா ஆரம்பமாகியது. தமிழீழ அரசியல் துறை பொறுப்பாளர் ப. தமிழ்ச்செல்வன் நீதிமன்றை திறந்துவைத்தார். காவல்துறையினரின் பான்ட் வாத்தியம் முழங்க காவல் துறை பொறுப்பாளர் நடேசன் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். யாழ். மாவட்டத் தளபதி அன்பு மங்கள விளக்கு ஏற்றி வைத்தார்.

விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களான யோகி, பாலகுமார், இளம்பரிதி, ஜனனி, தேவர், கரிகாலன் ஆகியோர் விழாவில் சிறப்பு விருந்தினராக வருகை தந்திருந்தனர்.

விழாவிற்கு ஏராளமான பொதுமக்களும் வந்திருந்

(6 ஆம் பக்கம் பார்க்க)

இரு வழக்குகள் நேற்று விசாரணை

நேற்று திறந்து வைக்கப்பட்ட யாழ். மாவட்ட நீதிமன்றில் இரு வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

முதலாவது வழக்கில் கணபதிப்பிள்ளை மாணிக்கம் என்பவர் சட்டவிரோதமாக அனுமதிப்பத்திரமின்றி, வீட்டிலே வைத்து கள் விற்றதற்காக குற்றச்சாட்டப்பட்டு ஆஜர் செய்யப்பட்டார்.

அவரை முதலியார் - குற்றவாளியா, சுற்றவாளியா என கேட்டபோது அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார் தொடர்ந்து அவருக்கு 300 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

தொடர்ந்து ஆசீர்வாதம் அன்ரன் ஜோர்ஜ் என்பவருக்கும் இதே குற்றத்துக்காக சட்டக்கோவை 14 இன்படி 200 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. நீதிமன்றம் திங்கட்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டது. (இ-152)

1,138 ஈழ அகதிகள் நேற்று திருமலை வந்தடைந்தனர்

கொழும்பு, ஆக. 22

தமிழகத்தில் தங்கியிருந்த 360 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 138 ஈழ அகதிகள் நேற்று திருகோணமலையை வந்தடைந்தனர்.

நேற்று வந்து சேர்ந்த அகதிகள் திருமலை, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

மற்றொரு தொகுதி ஈழ அகதிகள் எதிர்வரும் 25 ஆம் திகதி திருமலையை வந்தடைவர் என்றும் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

வாகரை சுற்றிவளைப்பு அப்பாவித் தமிழர் கைது

யாழ்ப்பாணம், ஆக. 22

மட்டக்களப்பு வாகரைப் பகுதியில் உள்ள கண்டலடி என்ற இடத்தை நேற்று முன்தினம் சுற்றி வளைத்த ஸ்ரீலங்கா இராணுவத்தினர் இரு அப்பாவி தமிழ் மக்களை கைதுசெய்துகொண்டு சென்றனர்.

4 பிள்ளைகளின் தந்தையான எதிர்மன்னசிங்கம் (40 வயது), தாய், தந்தையற்ற போகராஜா (22 வயது) என்ற இளைஞர் ஆகியோரே கைதானவர்கள் ஆவர்.

இதேவேளை கடந்த வியாழக்கிழமை இரவு 7 மணியளவில் வாகரை, 5 ஆம் வட்டாரத்தில் — வீட்டில் தங்கியிருந்த 3 பிள்ளைகளின் தந்தையான காளிக்குட்டி சதாசிவம் என்பவரும் [illegible] யப்பட்டு முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டார். (ஒ)

ஷார்ஜாவில் தீ விபத்து; இலங்கை பெண்களும் காயம்

ஷார்ஜா, ஆக. 22

ஐக்கிய அரபு எமிரேட்ஸின் தலைநகர் ஷார்ஜாவில் "பெயின்ற்" தொழிற்சாலை ஒன்ற தீப்பிடித்துக் கொண்டதில் ஏற்பட்ட விபத்தில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பலத்த காயங்களுக்கு உள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்களில் அதிகமானோர் இலங்கைப் பெண்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

"பெயின்ற்" தொழிற்சாலையில் மூண்ட தீ அயலில் உள்ள கட்டடங்களுக்கும், மற்றும் ஆடை தயாரிப்பு தொழிற்சாலைக்கும் பரவியது என்றும் —

அப்போது ஆடைத் தயாரிப்பு தொழிற்சாலையில் தங்கியிருந்த இலங்கைப் பெண்கள் பலரும் காயமடைய நேரிட்டது என்றும் செய்திகள் தெரிவித்தன.

நேற்று அதிகாலை வரை கட்டடங்கள் எரிந்து கொண்டிருந்தன என்றும், அங்கு நடந்த மிக மோசமான தீவிபத்து இது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

வெள்ளி இரவு படையினர் பரவலாக ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஆக. 22

வெள்ளி இரவு குடாநாட்டின் பல பகுதிகளிலும் படையினர் பரவலாக ஷெல் தாக்குதல் நடத்தினர்.

மாதகல், தெல்லிப்பளை ஆகிய இராணுவ நிலைகளில் இருந்து ஏவப்பட்ட பத்துக்கும் மேற்பட்ட ஷெல்கள் அலைவெட்டி, கிளான் பகுதிகளில் விழுந்து வெடித்தன. உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. எனினும் மூன்று

(6 ஆம் பக்கம் பார்க்க)

எதிர்பாராத வெடிவிபத்தில் 8 போராளிகள் வீரச்சாவு

தென்மராட்சிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற எதிர்பாராத வெடிவிபத்து ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த எண்மர் வீரச்சாவடைந்தனர்.

வண்ணன் (இராசநாயகம் சற்குணநாதன் — கரவெட்டி, யாழ்குளம் இரணைஇலுப்பைக்குளம்), அருள்வாசன் அல்லது முகிலன் (வேலுப்பிள்ளை செல்வக்குமார் — வியாவிலை, நாகர்கோவில், கிளிநொச்சி), வள்ளுவன் (இராமசாமி சண்முகரட்ணம் — மூன்றாம் கண்டம், முத்தையன்கட்டு), தமிழேந்தி அல்லது ராஜன் (ரகுநாதன் விநாயகமூர்த்தி — சொந்தக்காரன் குளம், பாலமோட்டை) சகாநாதன் அல்லது ரவிநாத் (ஆறுமுகம் ரவிராஜ் அம்பாள்குளம், மாங்குளம்) விநாயகன் (வடிவேல் நியாகராஜா — சேனைப்பிளவு, நெடுங்கேணி), வீரமணி செல்லத்துரை பார்த்திபன்- கிளிசுடான், நெடுங்கேணி), தவரஞ்சன் (பழனியப்பா செல்வகுமார் — கோணாவில், கிளிநொச்சி) ஆகிய போராளிகளே வீரச்சாவு அடைந்தவர்கள் ஆவர். (ஒ)

இலங்கைபற்றியபிரேரணை கடைசி நேரத்தில் வாபஸ்

அரசின் தலையீடே காரணம்

ஜெனிவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சிறுபான்மை இனப் பாதுகாப்புக்கான ஐ. நா. துணைக்குழுக் கூட்டத்தில் இலங்கையின் இனப்பிரச்சினையில் ஐ. நா. சபை தலையிடக்கோரும் பிரேரணை கடைசி நேரத்தில் வாபஸ் பெறப்பட்டது.

அமெரிக்கா, பிரான்ஸ், பெல்ஜியம், நோர்வே ஆகிய நான்கு நாடுகளைச் சேர்ந்த மனித உரிமைக் காப்பாளர்கள் இணைந்து இந்தப் பிரேரணைக்கு முன் அறிவித்தல் கொடுத்திருந்தனர்.

இந்தப் பிரேரணை நேற்று முன்தினம் இரவு விவாதிக்கப்பட்டு வரக்கெடுப்புக்கு விடப்பட இருந்ததாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்திருந்தன. எனினும் கடைசி நேரத்தில் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை என்றும்—

பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுவதை தடுத்து நிறுத்தும் இலங்கை வெளியுறவுத் துறையின் கடும் முயற்சி வெற்றிகண்டுள்ளது என்றும் வெரிதாஸ் வானொலி நேற்றுத் தெரிவித்தது. (இ-9

அரசு தலையீடு அதன் குறுகிய மனப்பான்மையை காட்டுகிறது

எதிர்க்கட்சி தரப்பில் கண்டனம்

கொழும்பு, ஆக. 22

ஜெனிவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சிறுபான்மை இனப் பாதுகாப்புக்கான ஐ. நா. துணைக் குழுக் கூட்டத்தில் இலங்கை இனப்பிரச்சினையில் தலையிடக் கோரி கொண்டுவரப்பட்ட பிரேரணை இலங்கையின் [illegible] பெறப்பட்டதை இலங்கை [illegible] கண்டித்துள்ளனர்.

ஸமா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த பற்றி விரக்கோன் பி.பி.ஸி. சிங்களச் சேவைக்கு பேட்டி அளிக்கையில் இலங்கையின் தலையீடு அதன் குறுகிய மனப்பான்மையையே காட்டுகிறது என்று தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் காங்கிரஸின் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலம் கருத்துத் தெரிவிக்கையில், சர்வதேச அபிப்பிராயத்தை எதிர்கொள்ளும் துணிவு அரசுக்கு இல்லை என்று தெரிவித்தார்.

பத்திரிகையாளரான ஸ்ரீஸிலன் ராஜகுணாநயகா கருத்துத் தெரிவிக்கையில் இப்பிரேரணையை வாபஸ் பெறச் செய்தது தனக்குக் கிடைத்த பெரும் ராஜதந்திர வெற்றி என்று அரசு காட்டிக்கொள்ள முயன்றாலும் அது உண்மையில் அரசுக்கு ஒரு பின்னடைவே என்று தெரிவித்துள்ளார். (இ-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றீஷன் தொழிற் பயிற்சி நிறுவனம்
PATRICIAN INSTITUTES

தொழில் நுட்ப பயிற்சி நெறிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்

1. Diploma in Computer Studies
   - ★ BASIC
   - ★ WORD PROCESSING
   - ★ LOTUS 1 - 2 - 3
   - ★ d BASE III PLUS

   DURATION: 9 Months
   WEEK DAYS AND WEEK - END CLASSES (Theory and Practicals)
   COMMENCING: 04 — 09 — 1993

2. Computer Processing Courses:
   1. Computer Programming in BASIC Language and MS-DOS.
      DURATION: 4 Months COMMENCING: 01—09—1993
   2. Word Processing and MS-DOS
      DURATION: 3 Months COMMENCING: 01—09—1993
      WEEK DAY CLASSES (Theory and Practicals)
   3. d BASE III Plus and MS-DOS
      DURATION: 4 Months COMMENCING: 01—09—1993
   4. Lotus 1-2-3 (Spread Sheet Analysis and MS-DOS
      DURATION: 4 Months COMMENCING: 01—09—1993
      WEED END CLASSES (Theory and Practicals)
      EQUIPMENT USED: Laser XT/2 XT/3, 386 and Bitcom Computers IBM Compatibles)

   QUALIFICATION: G. C. E. (O/L)

   பின்வரும் பயிற்சி நெறிகள் எதிர்வரும் 01 — 09 — 1993 [புதன்கிழமை] ஆரம்பமாகும்.

3. Civil Draughtsmanship and Quantity Surveying Course Covers
   - (i) Draughtsmanship
   - (ii) Engineering Drawing
   - (iii) Building Construction
   - (iv) Civil Engineering Materials
   - (v) Building Quantity
   - (vi) Building Materials

   QUALIFICATION: G.C.E. (O/L) DURATION: 6 Months

4. City and Guilds of London Examination Year - 93/94
   - (i) Quantity Surveying Part: (I & II)
   - (ii) Electrical Electronic Engineering Technician PART I & II

   SUBJECTS: (i) Engineering Science and Circuits
   (ii) Power
   (iii) Electronic
   QUALIFICATION: G. C. E. (O/L)
   PART III
   SUBJECTS: (i) Advance Electrical Technology
   (ii) Generation Transmission and Distrfbution of Electrical Energy.
   ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்
   QUALIFICATION: Part II சித்தி எய்தியோர் மட்டும்

5. Special English Classes
   இலக்கணத்துடன் க. பொ. த. (சா/த) மற்றும் சகல பரீடசைகளுக்கும் ஏற்றவகையில் மிகக் குறுகிய காலப் பயிற்சி நெறிகள் நடைபெறும்.
   DURATION: 4 Months

6. TOEFL (Test of English as a Foreign Language)
   DURATION: 4 Months

7. Short Hand and Typing (English)
   கருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்)

8. Motor Mechanism
   மோட்டார் வாகனம் திருத்துதல் காலம்: 6 மாதங்கள்
   (டீசல், பெற்றோல் இயந்திரங்கள் யாவும்)

9. Motor Winding
   மோட்டார் வைண்டிங் காலம்: 4 மாதங்கள்

10. Electrical Wiring
    மின்சார இணைப்பு காலம்: 3 மாதங்கள்

11. General Electrician
    ஜெனரல் எலக்ரிஷியன் காலம்: 4 மாதங்கள்
    இதில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடத் திட்டங்கள்
    1. அடிப்படை மின்சாரம் (AC/DC) — BASIC Electrcility
    2. மோட்டார் வைண்டிங் — Motor Winding
    3. ஆர்மேச்சர் வைண்டிங் — Armature Winding
    4. ரான்ஸ்போமர் வைண்டிங் — Transformer Winding
    5. எல்லா விதமான மின் உபகரணங்கள் பழுது பார்த்தல் இயக்குதல் — Repairing of all Type of Electrical Equipments

விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு:

பதிவாளர்,
பற்றீஷன் இன்ஸ்ரிரியூட்ஸ்:
59, சென் பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

REGISTRAR,
PATRICIAN INSTITUTES OF HIGHER STUDIES,
59, ST. PATRICKS ROAD,
JAFFNA.

குறிப்பு:
சகல பயிற்சி நெறிகளின் முடிவில் செய்முறைப் பயிற்சிகளும் வழங்கப்பட்டு, பரீட்சைகளும் நடத்தப்படும். சித்தியடைபவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.
MOTOR MECHANISM நெறியில் உள்ளவர்கள் தமது பயிற்சி நெறியை முடித்த பின்பு தகுதியானவர்களுக்கு வேலைவாய்ப்புகள் பெற்றுத்தரப்படும்.

(27022)

சுன்னாகம் வர்த்தகர் சங்கம்
ஆதரவில் நடைபெறும்
மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

காலம்: இன்று ஞாயிற்றுக்கிழமை 22—08—1993
இடம்:- கந்தரோடை சவாரி மைதானம்
நேரம்: மாலை 2. 30 மணி

பிரசுர அன்பளிப்பு:
சக்தி மருந்தகம்

(சி/2025)

தேவை

வில்லியம் ஹாவே தனியார் மருத்துவமனை
சுண்டிக்குளி

மேற்படி மருத்துவமனைக்கு கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. டாக்டர்
   அ) முழுநேர அளவிலான வேலை
   M. B. B. S. தரம்
   ஆ) பகுதிநேர அளவிலான வேலை
   M. B. B. S. தரம்
2. தாதியர்
   சத்திரசிகிச்சை கூடத்தில் அனுபவம் பெற்ற பெண்தாதி

(மேற்படி விண்ணப்பங்களுக்கு ஒப்பு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்)

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
நிர்வாகத்தினர்,
வில்லியம் ஹாவே தனியார் மருத்துவமனை
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

(27023) — நிர்வாகத்தினர்.

மீண்டும் அஸ்ரனில்
வெளிவாரி பட்டப்படிப்புகள்
✶ B. A. பரீட்சைக்கான (பேராதனை)

3 மாத **துரித மீட்டல் வகுப்புகள்**
★ யாழ். பல்கலைக்கழக
(வெளிவாரி 1ஆம் 2ஆம் வருட)

பரீட்சைகளுக்கான
துரித பயிற்சி வகுப்புகள்
ஆரம்பம்: 04 - 09 - 1993
மு ப. 9 மணி

பொருளியல்: மெய்யியல்:	திரு. மன்மதராசன்
அரசியல்:	திரு. கேதீஸ்வரன்
தமிழ்:	திரு. நாகேஸ்வரன்
இந்துநாகரிகம்:	திரு. M. J. சர்மா
கணக்கியல்/வர்த்தகம்:	பிரபல ஆசிரியர்கள்

விவரங்களுக்கு:
அஸ்ரன் கல்வி நிலையம்
101/10 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகில்)

(சி5681)

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்: 27 — 11 — 1945
அந்நியன் அழிப்பு: 25 — 08 — 1990

அமரர் ஏரம்பு துரைராசா
(சிராமசேவையாளர் - மன்கும்பான்)
திதி: 22 — 8 — 1993

அன்பான தெய்வமே!
நினத் தோறும் நாம் அழுது
நினறகின்றோம் திடீர் மறைவால்
திடமுடனே நாம் இருக்க
திட்டங்கள் தீட்டினீரே
இனப்பொழுதில் மூன்றாண்டு கழிந்தாலும்
நினக்கள் மதி ஒளியாய்
திடமுடனே எம்மனதில் இருப்பீரே எந்நாளும்!

- குடும்பத்தினர்.

414/6 கோவில் வீதி,
நல்லூர்.

(27026)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் பிரச்சினை சர்வதேச மயப்படுகிறது; அமைச்சர் ஹமீது விலாங்காக முடியுமா?

"அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார் வழுக்கியும் கேடு ஈன்பது"

தெய்வப்புலவன் திருவள்ளுவனின் பொய்யா மொழி இது. தமிழர்களுக்குக் கேடு நினைத்து இப்போது தனக்கே கேடு வருவது கண்டு பதற்றம் அடைந்து நிற்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் அதன் தலைவர்களுக்கும் வள்ளுவன் கூறிய இந்த அறிவுரையின் உண்மை தெரிந்திருக்குமோ என்னவோ?

ஈழத் தமிழர் விவகாரம் சர்வதேச மயப்படப் போகிறதே என்ற ஏக்கத்தில், அச்சத்தில், குழப்பத்தில் ஏதேதோ எல்லாம் செய்யத் துடிக்கும் ஸ்ரீலங்கா அரசத் தலைவர்கள் இத்தனை காலமாக இந்தத் திருக்குறளை படித்திருப்பார்களோ அதன் பொருள் உணர்ந்திருப்பார்களோ என்பது சந்தேகமே!

தமிழர்கள் தங்கள் உரிமைகளைப் பெற்றுச் சிங்களவர்களைப் போல சுதந்திர புருஷர்களாக வாழும் ஆக்கம் பொறாதவர்களாக—

தமிழர்களை அடிமைகளாக— இரண்டாந்தரப் பிரசைகளாக— அடக்கி ஆள வேண்டும் என்ற விருப்பம் கொண்டு, அதனைச் செயற்படுத்தவதற்கு பல்வேறு அநாநெறிகளையும் மீறி—

மறத்தின் வழி நின்று ஆடிய ஆட்டம் இப்போது வினையாக வந்து தலைமேல் பாரமாய், தட்டிக் கழிக்க முடியாத, ஏமாற்றித் தப்பமுடியாத நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறது.

தமிழர் பிரச்சினை— இனப் பிரச்சினை என்று பெயரிடப்பட்டுள்ள பிரச்சினை— அரை நூற்றாண்டு கால விவகாரம். தமிழர்கள் மீது சிங்களவர்களுக்கு அழுக்காறு இல்லாதிருப்பின் இந்தப் பிரச்சினையே தோன்றியிருக்காது.

அது தோன்றுவதற்கு வழி செய்தது முந்திய சிங்களத் தலைமைத்துவம். பிரச்சினையை இன்றைய நிலைக்குப் பேணியும் வளர்த்தும் விட்டது இடைவில் வந்த தலைமைத்துவம். கடந்த பத்து ஆண்டுகளிலும் இனப் பிரச்சினை பெரும் பூதமாக வளரத் துணை செய்தது தற்கால சிங்களத் தலைமைத்துவம். கடைசி அணியில் நின்று தமிழர் இன ஒழிப்பைத் தீவிரப்படுத்தினார்கள் ஸ்ரீமாவோ, ஜே. ஆர்., பிரேமதாசா ஆகியோர், அவர்களுக்கு வழிகாட்டிய மாஓசேக் குருவான சிங்களபௌத்த பேரினவாதம் நேற்று வந்த விஜேதுங்காவையும்—வழமைபோலத் தனது வலைக்குள் வீழ்த்தி தமிழருக்கு எதிரான ஆட்டுமியத்தையும், அரக்கத்தனத்தையும், அடக்குமுறையையும் தீவிரப்படுத்தி இருக்கிறது.

பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த சிங்களபௌத்த பேரினவாதம் உண்மை என்றோ ஒருநாள் வெளியே வரும்; விழித்துக் கொள்ளும்; பொய்யை அழித்துக் கொல்லும் என்பதை மறந்துவிட்டது. ஆனால் உண்மை உறக்கத்திலிருந்து எழுந்து கொண்டதுமே பொய்மையில் கட்டிய மாளிகையை அதிர்ந்து ஆட்டம்காணத் தொடங்கியுள்ளது.

இனப்பிரச்சினை உள் நாட்டு விவகாரம். அது தமிழர் சம்பந்தப்பட்ட பிரச்சினையே அல்ல. வெறும் பயங்கரவாதம் தான். பயங்கரவாதத்தை இராணுவ நடவடிக்கை மூலம் ஒடுக்குவதிலேயே ஸ்ரீலங்கா அரசு ஈடுபட்டிருக்கிறது. தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்படவில்லை. ஆயுதம் ஏந்திப் போராடும் விடுதலைப் புலிகளை ஒடுக்குவதிலேயே அரசு ஈடுபட்டுள்ளது. தமிழர்களின் உரிமைகள் பலவும் வழங்கப்பட்டுள்ளன. மொழி உரிமை வழங்கப்பட்டுவிட்டது. மாகாண சபை மூலம் அதிகாரம் பரவலாக்கப்பட்டுள்ளது.

தென்னிலங்கையின் பல பகுதிகளிலும் தமிழர்கள் பாதுகாப்புடன் நிம்மதியாக வாழ்கிறார்களே. தமிழர்களின் மனித உரிமைகள் மீறப்படுவதல்லை — என்று இவ்வாறாக இன்னும் பல பல பொய்களை ஒன்று திரட்டி அவற்றை அத்திவாரமாக இட்டு ஸ்ரீலங்கா அரசு தமிழர் விவகாரம் குறித்து பொய்யான தோற்றம் ஒன்றை உலகுக்குக் காட்டி ஏமாற்றி வந்தது — வருகிறது.

தமிழர்கள் மீது அடக்குமுறையைக் கட்டவிழ்த்து, யுத்தத்தைத் திணித்து அவர்களை இராணுவக் காலால் நசித்துக் கொண்டு, இனச் சுத்திகரிப்புச் செய்து கொண்டு தான் அப்பாவி என்றும் நீதியாக நடந்து கொள்வதாகவும் உலகத்தை ஏமாற்றி நம்ப வைக்கிறது ஸ்ரீலங்கா அரசு. வெளிநாடுகள் ஏழ்மைக்கென இரங்கி வழங்கும் பண உதவியைக் கொண்டு தமிழர்களின் சுதந்திரப் போராட்டத்தை நசுக்க யுத்தம் நடத்தி வருகிறது.

உலகத்தை ஏமாற்ற உள்ளூராட்சித் தேர்தல்

அரசியல்

எல்லாக் காலமும் ஏமாற்ற முடியாது

சிலரைப் பல காலம் ஏமாற்றலாம். பலரைச் சிலகாலம் ஏமாற்றலாம். எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்ற முடியாது. அந்தக் காலம் தமிழர் பிரச்சினை விவகாரத்தில் இப்போது உதித்துள்ளது. மூன்று வருடப் போரும் அதன் விளைவுகளும் தமிழர் பிரச்சினையை சர்வதேச மயப்படுத்த ஆரம்பித்துவிட்டன. அதனைத் தடுக்க ஸ்ரீலங்கா அரசு முயன்றாலும் பலன் அளிக்கப்போவதில்லை. போரைத் தொடங்கிய வினை, பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண நாடாத வினை மொத்தமாக வந்து வாட்டத் தொடங்கி உள்ளது.

வியன்னாவில் நடந்த மனித உரிமைகள் சம்பந்தமான மாநாட்டில் தமிழர் பிரச்சினை சர்வதேச மயப்படும் வலுவான சட்டம் ஆரம்பித்தது. அதில் கலந்து கொண்ட வெளிவிவகார ராஜாங்க அமைச்சர் ஜோன் அமரதுங்கா தன்னை நோக்கி விடப்பட்ட கண்டனக் கணைகளை எதிர்கொள்ள முடியாமல் தோல்வியுடன் திரும்பினார். இங்கே வந்து சமாளித்தார்.

அதனை அடுத்து, உலைவாகிய ஓர்துழைப்புக்கான உலகச் சபையின் ஐ. நா. மத்தியஸ்த யோசனை வந்த போது ஸ்ரீலங்கா அரசுக்கு மயக்கம் போடும் நிலை உண்டானது. கனடாவில் தலைமைபதிதைக் கொண்டியங்கும் அந்த சபை சமர்ப்பித்த ஐந்து அம்சத் திட்ட யோசனையில் உலகப் பிரசித்தி பெற்ற நோபல் பரிசு பெற்ற நான்கு அறிஞர்கள் கையொப்பம் இட்டிருந்தனர்.

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஐ. நா. மத்தியஸ்தம் செய்ய வேண்டும் என்று ஸ்ரீலங்கா அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் ஐக்கிய நாடுகள் சபையிடம் செவிளாளர் நாயகத்தைக் கேட்டுக் கொள்ள வேண்டும் என்பது அந்த யோசனையின் முக்கிய அம்சம்.

— உதயகாந்தன் —

அதனைக் கண்டதும் ஸ்ரீலங்கா அரசுக்குக் கை, கால்கள் உதறத் தொடங்கின. ஏதேதோ கோணல் "நியாயங்கள்", கதைகள் எல்லாம் கூறி எடுத்த எடுப்பிலேயே அதனை நிராகரித்து விட்டது.

பிரேரணை வந்தது

அந்த தலையிடி தீர்வதற்குள்ளே இப்போது ஐ. நா. வின் துணைக் குழுக் கூட்டத்தில் இனப்பிரச்சினையைத் தீர்க்க ஐ. நா. வின் தலையீட்டைக் கோர வேண்டும் என்ற பிரேரணையே வந்து விட்டது!

ஐ. நா. சிறுபான்மை இனப் பாதுகாப்புத் துணைக்குழு

(5 ஆம் பக்கம் பார்க்க)

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

அடுத்த மாதம் ஆறாம் திகதி செவ்வாய் - வியாழன் சந்திப்பு

அரசியல் துறையில் மாற்றம் வருமா?

இப்பிரபஞ்சத்தில் இரு வகையான உலகங்கள் உள்ளன. அவை உலகாயத உலகம் (Material world, ஆன்மீக உலகம் (Spiritual world) என்பன. உலகாயத உலகில் அசாதாரண நிகழ்வுகள் எனப்படுபவை ஆன்மீக உலகில் சாதாரண நிகழ்வுகள் ஆகின்றன. காற்றில் மனிதன் படுத்திருப்பது, பார்வையால் உலோகக் கம்பியை வளைப்பது, ஓடிக் கொண்டிருக்கும் "கேபிள் காரை" பார்வையால் நிறுத்துவது போன்று இன்னும் பலவற்றை நிகழ்த்துபவர்கள் இன்று இருக்கிறார்கள். ஆன்மீக உலகில் அட்டமாசித்திகள் போன்றவை சாதாரணமானவை. உலகாயதத்திற்குரிய விஞ்ஞான கோட்பாடுகளைக் கொண்டு ஆன்மீக உலகிற்குரியவற்றை விளங்கவைத்தல் முடியாது. அந்த அளவிற்கு அவை வளரவேண்டும். இதற்கு காரணம் ஆன்மீக உலகின் பின்னணியில் ஓர் பிரபஞ்ச அறிவு (Universal Intelligence) செயல்படுவதே. யாவற்றையும் இயக்குவது இந்த அறிவே யாகும். இதை அளவிடக் கூடிய அளவிற்கு விஞ்ஞானம் வளரவில்லை விஞ்ஞானமோ புவி விபரமோ ஓரளவிற்குத்தான் உதவும். சோதிட விஞ்ஞானமும் இத்தகைய அசாதாரண விஞ்ஞானமே.

சோதிட விஞ்ஞானம்

ஆன்மீக உலகிற்கு மிகவும் பொருந்துவதாகும். இன்னும் சிறு அளவிற்கு விஞ்ஞான அடிப்படை கொண்டு விளக்கலாம். பூமியின் மேற்பரப்பில் 80 வீதம் நீர் 20 வீதம் நிலமுண்டு. மனிதனிலும் 80 வீதம் நீர் 20 வீதம் திண்மமுண்டு. சூரிய சந்திர நிலைகளால் கடலில் அலையெழுச்சி ஏற்படுவதுபோல மனிதனது உடலிலும் நிரவ அலையெழுச்சி ஏற்படலாமென சில விஞ்ஞானிகள் நம்புகின்றார்கள். இதனால் தான் அமாவாசை, பூரணை காலங்களில் மனநோயாளர் நிலை மோசமடைகிறது. நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரிக்கின்றன. விஷம் உடலில் விரைவாகப் பரவுகிறது. வெட்டப்படும் மரங்களிலிருந்து அதிகளவு நீரிழப்பு ஏற்பட்டு அவை பட்டுப் போகின்றன. சோதிடத்தில் சூரியனுடன் தங்கும் இணைக்கப்பட்டுள்ளது. உலோகங்களின் 1 வீதம் உப்புக் கரைசல்களை வைத்து செய்யப்பட்ட ஆராய்ச்சியில் "தங்க குளோறைட்" மாத்திரம் சூரிய கிரகண வேளையில் மாற்றங்களைக் காட்டியது. இப்படி எத்தனையோ விஞ்ஞான ஆய்வுகள் பல சோதிட விஷயங்களை நிரூபித்துள்ளன.

செவ்வாய் மாற்றமும் விளைவுகளும்

அரசியல் சோதிடத்தில், செவ்வாய், வியாழன், சனி, ராகு போன்றவற்றின் மாற்றம், சேர்க்கை, பார்வை, ஆதிபத்தியம் போன்றவை மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. நெருப்பு, இரத்தம் சிந்துதல், ஆயுதப் புரட்சி, குண்டு வெடித்தல், வன்முறை போன்றவற்றை செவ்வாய் விளைவிக்கின்ற போதிலும், நன்மை விளைவிக்கும் போது நல்லவை விளையும் சர்வாதிகாரம், சர்வ வல்லமை பொருந்திய நன்மையான முடியாட்சி என்பவற்றைக் குறிக்கும். மறைவிடங்களில் செல்லும்போது அல்லது தொடர்புறும் போதும் செவ்வாய் தீமை விளைவிக்கும்.

செவ்வாய் 2-8-1993 அன்று கன்னி இராசிக்கு இடம் பெயர்ந்துள்ளது. 17-9-1993 வரை அங்கிருக்கும். இலங்கையின் இலக்கினம் கும்பம். கன்னி கும்பத்திற்கு அட்டம இராசி எனவே மறைவிடம். அங்கு ஏற்கனவே 8, 11க்குடைய வியாழன் உள்ளது. இதை 1, 10க்குரிய சனி 1இல் இருந்து நோக்குகிறது. செவ்வாய் 3, 10க்குரியதால் இலங்கையின் அயல் நாடுகள், அவற்றுடனான [illegible], போக்குவரத்து, [illegible] துறை, நூல்கள் மற்றும் இலங்கையின் இறைமை ஆட்சியிலுள்ள கட்சி, அதன் தலைவர் தேசிய ஒருமைப்பாடு, அதிகாரம் போன்றவற்றைக் குறிக்கும்.

வியாழன் பொருளாதாரத்தையும், சனி நாட்டையும் அதன் விரயத்தையும் குறிக்கும். இத்தகைய ஒரு கிரக நிலை ஏற்படும்போது பின் வரும் விளைவுகளை ஏற்படுத்தும். 02-08-93 தொடங்கி 17-09-93 வரை உள்ள காலப் பகுதியில் பின்வருவனவற்றுக்கான சாதகம் அதிகமாக உண்டு.

★ பாரிய பொருளாதார அழிவுகள்.

★ பாரிய இராணுவ இழப்புகள்

★ இலங்கையில் அதி உயர் அரசியல் தலைவருக்கோ அல்லது அவரது பதவிக்கோ ஆபத்து.

★ [illegible]

★ வெளிநாடுகள் அரசுகள் [illegible]

★ வெளிநாட்டிலுள்ள இலங்கை அகதிகளை திருப்பி அனுப்பி வைக்க ஒப்பந்தங்களை அந்தந்த நாடுகள் செய்து கொள்ளும்.

★ வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்காக பாரிய உதவிகளைச் செய்வதற்கு வெளி நாடுகள் ஒப்பந்தங்களைச் செய்தல்.

★ தெற்கில் அரசியல் கட்சிகள் பிளவுபடும். இராணுவத்திற்குள்ளும் இது நிகழும் அரசியல்வாதிகள் சிலர் இனக் கலவரத்தை தூண்ட முயல்வர்.

[illegible] ஏற்படுத்தும்படி மிகவும் கடுமையான அழுத்தம் பிரயோகித்தல். பொருளாதார உதவியை நிறுத்துதல்.

★ இவை காரணமாக ஓரளவிற்கு தமிழர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வொன்றை முன்வைக்கும் சாதகம் உண்டு. (வடக்கு-கிழக்கு இணைந்த சமஷ்டி போன்ற ஒன்று) பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுக்கப்படல்.

2	3	கே 15° 29' 4	சுக் 6° 24' புத 27° 03' 5
சனி 4° 36' (வக்)	02-08-1993 அன்றைய இலங்கையின் கிரக நிலை காலை 5 30		சூ 16° 03' 6
சந் 10° 12' 12			7
11	ரா 15° 29' 10	9	குரு 0° 04' வி 16° 15' 8

— கே. பி. சர்மா —

நிரூபித்துள்ளன. எனவே நாம் எல்லோரும் கூட்டாக சேர்ந்து இறைவன் பாதங்களில் சரணடைந்து வழிபாடு செய்தால் நிச்சயம் நல்ல பலனைத் தரும்.

எல்லோரதும் எண்ணங்களைக் ஒன்று திரண்டு மாபெரும் சக்தி அலையாகி பெரும் பலன் விளைவிக்கும். எனவே இன்று தொடக்கம் காலை 6 மணிக்கு 10 நிமிட நேரம் எவர் எங்கிருந்தாலும் என்ன செய்து கொண்டிருந்தாலும் மனதை இறைவன் பால் செலுத்தி எங்கள் உரிமைகள் கிடைத்து விடுதலை பெறவும், கஷ்டங்கள் நீங்கவும், பாதிக்கப்பட்டோர் நலம் பெறவும் ஒரே நேரத்தில் பிரார்த்தனை செய்வதால் நல்ல பலன் கிடைக்கும்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

15 நாட்கள் கொண்ட கலைமான் பிறவுண், வெள்ளை கறுப்பு இன பேட்டுக் குஞ்சுகளும் கினி கோழிகளும் உடன் விற்பனைக்குண்டு. 70/6, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். (6437)

புறோயிலர் இறைச்சிக் கோழிகளும் மூன்று வாரங்கள் நிரம்பிய லைகான் வெள்ளை பேட்டுக் குஞ்சுகளும், ஒரு வாரம் நிரம்பிய பாமாஸ், பாமாஸ் கறுப்பு, விப்பங்கிளர் குஞ்சுகளும் உடன் விற்பனைக்கு உண்டு. பினான் பரடைஸ், 152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (27019)

சல தடுப்பு ஊசிகளும் போடப்பட்ட நிலையில் உள்ள அழகிய பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 48/1, முதலாம் ஒழுங்கை (ஐங்கரன் விளையாட்டு கழக ஒழுங்கை), பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-5811)

லான்ட்மாஸ்டர்

நல்ல நிலையிலுள்ள சக்தி மிற்சுபிசி 10 HP லான்ட் மாஸ்டர் 4 கியூப் புதிய பெட்டியுடன் விற்பனைக்குண்டு. மில்பாவனைக்கு உகந்தது. தொடர்பு: இல. 48/1, முதலாம் ஒழுங்கை (ஐங்கரன் விளையாட்டுக் கழக ஒழுங்கை), பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-5812)

போட்டோ பிரதிகள்

உங்களுக்குத் தேவையான போட்டோஸ்ரற் பிரதிகள் இப்போது எம்மால் செய்து கொடுக்கப்படுகின்றன. சித்திராவா, விறான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-5669)

சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? உங்கள் வினாக்களுக்கு உரிய விடை உடனே கிடைக்கும். த. நிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (27008)

இலவச திருமண சேவை

38 வயது, சித்திரை. செவ்வாய் 12, சுவாதியில் Electrician தொழில்புரிபவர் லீவில் யாழ். வந்துள்ளார். தகுந்த மணப் பெண் தேவை. மணமக்களுக்கு தொடர்பு ஞாயிறு காலையில் விமலா, இலவச திருமண சேவை, நாச்சிமார் கோவிலடி. (26962)

ஜோதிட விஞ்ஞானம்

வியாழனும், செவ்வாயும் (கன்னிராசியில்) 8 பாகை சித்திரை நட்சத்திரத்தில் 08-09-93 முதல் 22-09-93 வரை 15 நாட்களுக்குத் தீய சேர்க்கை பெறுவதாலும் வக்கிரச் சனியின் பார்வையைப் பெறுவதாலும் வடக்கில் பாரிய யுத்தமேற்படும். ஜாதகங்களில் கணிப்புகளுக்குத் தெரிந்த சந்திக்கலாம். "சத்யா" இடிகுண்டு காமம், கட்டுடை. 6628)

O/L MATHS

G.C.E. (O/L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும், 26 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. (6440)

ஆங்கிலக் கல்வி

ஆரம்பத்திலிருந்து ஆங்கிலம் கற்பிக்கப்படுகின்றது. ஆங்கிலம் பேசவும் பயிற்சி அளிக்கப்படுகிறது. English Grammar. Spoken English Literature, V. N. Kandasamy (ஆங்கிலக் கல்வி ஆலோசகர், 87, திருநெல்வேலி றோட் (ரயில் கடவைக்கு அண்மையில்), கொக்குவில். (6438)

CAKE ICING CLASS

Cookery, Cake Icing புதிய வகுப்புக்கள் 28-8-93 சனிக்கிழமை முதல் ஆரம்பமாக உள்ளன. விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். Yogi Home science Academy, 71, நாயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் றோட், நல்லூர், யாழ்ப்பாணம். (27017)

பயிலுனர் தேவை

யாழ். நகரில் உள்ள பிரபலமான ஸ்ருடியோ ஒன்றிற்கு ஸ்ருடியோ வேலை பழக ஆர்வமுள்ள 15—20 வயதிற்குட்பட்ட ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். விண்ணப்ப முடிவு திகதி: 31-08-1993. மே/பா 914, உதயன். (சி-5674)

மணமகள் தேவை

உயர் இந்து, கௌரவமான குடும்பத்தைச் சார்ந்த செவ்வாய் குற்றமற்ற அரச தொழில்புரியும் B. Sc. மணமகனுக்கு 30 வயதுக்கு உட்பட்ட அழகிய மணமகள் தேவை. முழுவிவரத்துடன் விண்ணப்பிக்கவும். இல. 554, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (27021)

திருவள்ளுவர் படம்

தமிழ்மறையாம் திருக்குறள் தந்த திருவள்ளுவரின் மூவர்ணப்படம் ஒவ்வொரு வீட்டிலும், பாடசாலையிலும், வாசிகசாலையிலும் இருப்பது அவசியம். மில்க்வைற் நிலசோப் மேலுறை 25 தந்து அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ளலாம். மில்க்வைற். (சி-5807)

தவறிவிட்டது

20-08-93 காலை பழைய பூங்கா வீதி, நாவலர் வீதிக்கும் இடையில் 541414800V இலக்க அடையாள அட்டை இலப்புக் காலுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கி. பி. சேவியர், இல. 30, பழைய வீதி (1 ஆம் ஒழுங்கை), யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். (27013)

முச்சக்கர வண்டி

அரியாலை, ஆக. 22

யாழ். பிராந்திய சுகாதார திணைக்களத்திற்கு 'குமண' கப்பலில் 6 முச்சக்கர வண்டிகள் வந்து சேர்ந்துள்ளன.

இந்த முச்சக்கர வண்டிகள் யாழ். மாவட்டத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு வழங்கப்படும் என சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (த-17)

பதவி வெற்றிடம்

[உடனடி வேலைவாய்ப்புக்கள்]

தென்மராட்சி எல்லைக்குள் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய வேலைத் திட்டங்களுக்கு பின்வரும் பதவிகளுக்கு தகுதியான அபேக்ஷகரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. கணக்காளர் (வயதுக் கட்டுப்பாடு இல்லை)
2. உள்ளக கணக்காய்வாளர் (வயதுக் கட்டுப்பாடு இல்லை)
3. கணக்கு பதிவாளர் (வயதுக் கட்டுப்பாடு இல்லை)
4. காசாளர் (வயது எல்லை 25 — 45 வரை)
5. எழுது வினைஞர்கள் (வயதுக் கட்டுப்பாடு இல்லை)
6. வேலைத் திட்ட முகாமையாளர் (பல்துறைகளிலும் முகாமையாளர் தேவை)
7. பொறி முறை பொருத்துநர் (Mech - Fitter)
8. பணியாளர்கள் (வயது எல்லை 50 மேற்படலாகாது)
9. சமையல்காரர் (ஆண்கள் மட்டும்)
10. உணவு பரிசாரகர் (வயது எல்லை இல்லை)
11. காவலாளிகள்

★ வெற்றிடம் 1 தொடக்கம் 7 வரை விண்ணப்பிக்கும் அபேட்சகர்கள் தங்கள் கல்வித் தகைமைகள், தொழில் அனுபவங்கள், விசேட தகைமைகள் ஆகிய விபரங்களுடன் தமது சொந்த கையெழுத்தில் விண்ணப்பங்களை தயார் செய்தல் வேண்டும்.

சம்பளம்:

கல்வித் தகைமை, முன் அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்கள் அனைத்தும் கடிதத் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு தபால் மூலமோ அல்லது நேரிலோ கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு 05-09-1993 நண்பகல் 12 மணிக்கு முன்பு கிடைக்கக் கூடிய வகையில் அனுப்பப்படுதல் வேண்டும்.

பொறுப்பாளர்,
கேடில்ஸ் தும்புக் கைத்தொழில்-நிறுவனம்,
தலைமை அலுவலகம்,
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

(27012)

ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

இவ்வுலகில்:
16—09—1943

விண்ணுலகில்:
22—08—1987

திருமதி
சிவலோகேஸ்வரி சிவதாசன்

ஆண்டு ஆறு ஆனாலும், ஆறாது எம்துயர். உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவன், மகன்,
உற்றார், உறவினர்.

"பிரஷாந்தி",
கோப்பாய் வீதி,
உரும்பராய். (6429)

அறிவித்தல்

வட இலங்கைச் சங்கீத சபை
அறிமுறைத் தேர்வு - 1993

தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்ட மேற்படி தேர்வு 1993-09-04 (சனி), 1993-09-05 (ஞாயிறு) ஆகிய திகதிகளில் நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. தேர்வு நாடிகளுக்கு முன்னர் அறிவிக்கப்பட்ட தேர்வு நிலையங்களில் 1993-05-15 ஆம் திகதி நடைபெறவிருந்த பாடங்கள் 1993-09-04 ஆம் திகதி சனிக்கிழமையும், 1993-05-16 ஆம் திகதி நடைபெறவிருந்த பாடங்கள் 1993-09-05 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும் என்பதைத் தேர்வு நாடிகளுக்கு அறியத் தருகிறேன்.

இ. சுந்தரலிங்கம்,
யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளரும்,
வட இலங்கைச் சங்கீத சபைத் தலைவரும்.

(சி-5562)

நல்லூர் முருகன் சனசமூக நிலையம்
அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

மேற்படி நிலையத்தினால் 20-08-1993 இல் நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசு பெறும் சீட்டுக்களின் இலக்கங்கள் பின்வருமாறு:

முதலாம் பரிசு:	2408
இரண்டாம் பரிசு:	2472
மூன்றாம் பரிசு:	3585

ஆறுதல் பரிசுகள்

2415,	2384,	1306,	0203,
3556,	3230,	0919,	2541,
2140,	0381.		

ச. இராமநாதன்
செயலாளர்.

75/2, செட்டித்தெரு,
நல்லூர். [27022]

17 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 30 — 05 — 1914

உதிர்வு: 30 — 08 — 1976

அமரர் இ. செல்லையா
(சன்னைட் றைக்கிளிங்கின் ஸ்தாபகர்)

ஆண்டு பதினேழு ஆகியும் - உங்கள்
ஆசிதான் எங்களைக் காக்குதப்பா!
மண்மிசை வாழ் வாழ - நல்
வழி காட்டி வைத்தீர்!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

30/2, மருதடி லேன்,
நல்லூர். (சி/5677)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர்
விசாலாட்சி வீரகத்தி
(கரணவாய் கிழக்கு - கரவெட்டி)

காலஞ்சென்ற கிராமத் தலைமைக்காரர் சிற்றம்பலம் வீரகத்தியின் அன்பு மனைவி அமரர் விசாலாட்சியின் இல்லத்தில் 23 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும் அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இ. இரத்தினகோபால்,
(இளைய மகன்,
நெல்லியடி.)

கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.
22-08-1993. (27020)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எகிப்தில் முபாரக் அரசை அச்சுறுத்தும் இஸ்லாமிய தீவிரவாதிகளின் தாக்குதல்

இவ்வாரம் எகிப்தில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் எகிப்திய உள்துறை அமைச்சர் காயம் அடைந்தார். அவருடன் கூட இருந்த பாதுகாவலர்கள் சிலர் கொல்லப்பட்டனர்.

இந்த கொலை முயற்சிக்கு இஸ்லாமிய அடிப்படை மதவாதிகளான தீவிரவாதிகளே (Fundamentalists) பொறுப்பு என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

சாதாரண குற்றங்களுக்காக எகிப்திய அரசாங்கம் கடந்த மாதம் ஏழு இஸ்லாமிய தீவிரவாதிகளைத் தூக்கிலிட்டது. அந்தச் சம்பவம் நடந்து ஒரு மாத காலத்திற்குள் தற்போது முக்கிய பதவியில் உள்ள அமைச்சர் ஒருவரைக் கொலை செய்ய முயற்சி நடைபெற்றிருப்பது எகிப்தின் நிச்சயமற்ற எதிர்காலத்தையே காட்டுகிறது.

முபாரக்கின் கடும் போக்கு

1981ஆம் ஆண்டு அன்வர் சாதாத்தின் (Anwar Sadat) படுகொலையை அடுத்து பதவிக்கு வந்தவர் ஹொஸ்னி முபாரக் (Hosnimubarak) இவரது 13 வருட ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற மோசமான சம்பவமாக இந்த வாரம் நடந்த அமைச்சர் ஒருவர் மீதான குண்டுத்தாக்குதல் கருதப்படுகிறது

ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் இஸ்லாமிய தீவிரவாதிகளை அடக்குவதில் மிகவும் கடுமையான நடவடிக்கையை எடுத்து வருகிறார்.

கடந்த மாதம் ஏழு இஸ்லாமிய தீவிரவாதிகள் தூக்கிலிடப்பட்ட பின் இஸ்லாமிய தீவிரவாதிகளின் நெருக்குதல் முபாரக் அரசுக்கு வலுத்து வருகிறது.

சாதாரணமான குற்றத்துக்காக — அதாவது உல்லாசப் பயணிகள் மீது தாக்குதல் நடத்திய குற்றத்துக்காக கடந்த மாதம் இந்த ஏழு தீவிரவாதிகளும் தூக்கிலிடப்பட்டிருந்தனர். சமீப காலங்களில் எகிப்திய சரித்திரத்தில் பெரிய சம்பவமாக அது கருதப்பட்டது.

1981ஆம் ஆண்டு அரச அணிவகுப்பு மரியாதை ஒன்றை ஏற்றுக் கொண்டிருந்த சமயம் ஜனாதிபதி அன்வர் சாதாத் கொல்லப்பட்டார். அவரின் கொலைக்காக அப்போது ஐந்து பேர் தூக்கிலிடப்பட்டனர். அந்த ஐந்து பேர் தூக்கிலிடப்பட்ட போதே எகிப்திலும் ஈரானிய பாணி புரட்சி ஒன்று வெடிக்கலாம் என்று அப்போது ஊகங்கள் தெரிவிக்கப்பட்டன.

ஆனால் முபாரக் இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கு எதிராக எடுத்த கடும் நடவடிக்கைகளின் மூலம் கடந்த 12 வருடகாலமாக தனது ஆட்சியை ஒருவாறு தக்க வைத்து வருகிறார்.

அரசியல் வாரிசு இல்லை

காமல் அப்துல் நாஸரைப் போன்று தனக்கென ஓர் அரசியல் வாரிசை ஏற்படுத்திக் கொள்ளாதவர் முபாரக்.

இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கு எதிரான தனது நீண்ட போராட்டத்தில் தற்போது அவர் நிலை தடுமாறி வரும் அறிகுறிகள் தென்படுகின்றன.

இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கு எதிரான இவரின் போராட்டம் நாட்டின் பொருளாதாரத்தை மிகவும் மோசமாக சீர்குலைத்து வருகிறது.

நாட்டுக்குப் பெரும் வருவாயைத் தோற்றுவித்துக் கொடுத்த உல்லாசப் பயணத் துறையில் பெரும் வீழ்ச்சியடைந்து ஏற்பட்டிருக்கிறது.

ஈரிரக்கமின்றி ஆயிரக்கணக்கான தீவிரவாதிகள் தற்போது எந்தவித விசாரணையும் இன்றி சிறையில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்காக ஆஜராக சட்ட அறிஞர்கள் எவரும் இல்லை

எகிப்திய ஆயுதப்படையினர் எவரையும் கொலை செய்ய "லைசென்ஸ்" வழங்கப்பட்டிருப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபை சமீபத்தில் தனது அறிக்கையில் குற்றஞ்சாட்டி இருந்தது

காம்ப் டேவிட் ஒப்பந்தம்

1979ஆம் ஆண்டு காம்ப் டேவிட் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு இஸ்ரவேலுடன் சமாதானம் செய்து கொண்டதுக்கே இஸ்லாமிய தீவிரவாதிகள் அன்வர் சாதாத்தைக் கொலைசெய்திருந்தனர்.

1967இல் அப்துல் காமல் நாஸரும், 1973இல் அன்வர் சாதாத்தும் இஸ்ரவேலுடன் ஒவ்வொரு யுத்தத்தை நடத்தி முடித்திருந்தனர். இஸ்ரவேலை இராணுவ ரீதியில் வெல்ல முடியாது என்ற நிலைப்பாட்டுக்கு எகிப்துக்கு வந்ததே 1979 காம்ப்டேவிட் ஒப்பந்தம் ஆகும்.

1952இல் மன்னர்பாருக்கை வீழ்த்திய எகிப்திய புரட்சியின் பின்னர் 1953இல் பதவிக்கு வந்தவர் காமல்அப்துல் நாஸர். இவர் எந்த நோக்கத்துக்காக அரபு உலகில் இஸ்லாமிய ஒருமைப்பாட்டைக் கட்டி எழுப்பினாரோ அதே நோக்கத்தை காம்ப்டேவிட் ஒப்பந்தம் சீர்குலைத்து எகிப்தை மீண்டும் இஸ்லாமிய அடிப்படை மதவாதிகளின் நெருக்குதலுக்குள் தள்ளி விட்டுள்ளது.

அப்துல் ரஹ்மான்

தற்போது முபாரக் அரசுக்குப் பெரும் சவாலாக இருப்பவர் ஷேக் ஒமார் அப்துல்—ரஹ்மான் ஆவார்.

1990 முதல் அமெரிக்காவில் வசித்துவரும் அப்துல் ரஹ்மான் சாதாரண ஒரு வீசா குற்றம் காரணமாக அமெரிக்காவில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

இவரை நாடு கடத்துமாறு எகிப்திய அரசாங்கம் கோரி வருகிறது. ஆனால் அமெரிக்கா இதற்கு மறுப்புத் தெரிவித்துவருகிறது. சாதாரண குற்றங்களுக்கே தூக்குத் தண்டனை விதிக்கும் முபாரக் அரசு அப்துல் ரஹ்மானையும் ஒழித்துக்கட்டி விடலாம் என்று அமெரிக்கா கருதுகிறது.

ஈரானிய பாணிப் புரட்சி

எகிப்திலே ஈரானிய பாணிப் புரட்சி ஒன்று நடத்துவதே அப்துல் ரஹ்மானின் குறிக்கோள் என்று சொல்லப்படுகிறது.

15 வருடங்களுக்கு முன்னர் ஈரானில் நடந்த மக்கள் புரட்சியின் போது மன்னர் ஷா பதவி கவிழ்க்கப்பட்டார்.

நீண்டகாலம் வெளிநாடுகளில் அஞ்ஞான வாசம் செய்து வந்த ஆயத்துல்லா கொமேனி நாடு திரும்பி இன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

ஈரானிய பாணி புரட்சி வெடிக்குமா?

— சஞ்சாரன் —

உதயன்

சித்த மருத்துவம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த வைத்திய மாணவர்கள் கடந்த பல நாட்களாகப் போராட்டம் ஒன்றை நடத்தி வருகிறார்கள். இப்போது கலைப்பீடத்தின் கீழ் ஒரு இணைக்கலைமாக இயங்கி வரும் சித்த வைத்தியத் துறையை தனித்துவத்துடன் இயங்கவிடாது தனிப்பீடமாக்க வேண்டும் என்பது அவர்களின் போராட்டத்தின் நோக்கம்.

மேலைத்தேச வைத்தியம் ஆசிய நாடுகளில் அறிமுகமாகு முன்னர் அந்தந்தப் பிரதேசத்து சுதேச வைத்திய முறைகள் மக்களின் பிணி போக்கும் சேர்த்தி பெற்று விளங்கின. சித்த மருத்துவம் தமிழர்களின் சுதேச வைத்தியம். பல நூற்றாண்டுகளாகத் தமிழ் மக்களின் பாரம்பரிய வைத்தியமாக விளங்குவது.

வெளிநாட்டார் ஆக்கிரமிப்போடு, மேலைத்தேச மருத்துவ முறைகள் வந்து சேர்ந்த தால் சித்த வைத்தியம் சிறிது ஒதுக்கப்பட்ட ஒன்றாகத் தோன்றலாயிற்று. ஆயினும் மக்களின் நாளாந்த வாழ்க்கையில் அது இன்னமும் ஒன்றறக் கலந்திருப்பது கண்கூடு. இந்தப் போர்க்கால சூழ்நிலையில் சித்த வைத்தியமே கைகொடுப்பதையும் காண்கிறோம்.

சித்த மருத்துவத்துறை வளராமைக்கு சித்த மருத்துவக் கல்வி பொதுச்சொத்தாகப் படாமல், குடும்பக் கல்வியாக முடக்கப்பட்டிருந்ததே காரணம். சித்த வைத்தியர்கள் தமது சிகிச்சை முறைகளையும் நுணுக்கங்களையும் பிதர் அறியாமல், தமது குடும்ப - சந்ததி -உறுப்பினர்கள் மட்டுமே அறிந்து தொழில் நடத்திச் சம்பாதிக்கவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களாக இருந்தார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை.

அந்த நிலை இப்போது சற்று மாற்றங் கண்டுள்ளது. சித்த மருத்துவத்தைப் பயில்வதற்கு ஆர்வமுள் தகுதியும் உள்ளவர்கள் அதனைப் படிப்பதற்கு இப்போது வசதி உண்டு.

எனினும் மேலைத்தேச மருத்துவங்களுடன் போட்டி போடும் அளவுக்கும், இன்றைய காலத்தின் தேவையைப்பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கும், அது வளரவில்லை என்பது பெரும் குறைபாடாகும். ஆகையால், விடுதலையை நாடி நிற்கும் நாம், சுதந்திர அரசொன்றை அமைப்பதற்கான பலவேறு அடிக்கட்டு மானங்களையும் உருவாக்கி வரும் நாம், சித்த மருத்துவத் துறையிலும் மறுமலர்ச்சியைத் தோற்றுவிப்பது இன்றியமையாததாகும்.

விடுதலை வேட்கையின் வெளிப்பாடாக மொழி, கலை, பண்பாட்டுத் துறைகளில் பெரும் புத்தெழுச்சி ஏற்பட்டு வருவதை கண்ணாரக் காண்கிறோம். தமிழர்களின் பாரம்பரிய வைத்தியமான சித்த மருத்துவத்துக்கும் அத்தகைய புத்தெழுச்சியும் அரணாடான மறுமலர்ச்சியும் அவசியம்.

அந்தக் கண்ணோட்டத்தில் நோக்குங்போது, யாழ். பல்கலைக்கழக சித்த வைத்திய மாணவர்களின் கோரிக்கை நியாயமானது. பல்கலைக்கழக நிர்வாகமும் சித்த மருத்துவத்துக்குத் தனிப்பீடம் அமைக்குமாறு பரிந்துரைத்தும், ஒன்பது வருடங்களுக்கு முன்னரே அதற்கான நிட்டம் வகுத்திருந்தும், தெற்கில் உள்ள அதிகாரபீடம் அது குறித்து அக்கறை கொள்ளாதிருப்பது கண்டிக்கத்தக்கதாகும். தமிழருக்கு தன்னாட்சி அதிகாரம் இல்லாதிருப்பதின் நஷ்டம் இங்கே தெளிவாகிறது.

சித்த மருத்துவத்துக்கு புத்துணர்ச்சியும், புதுத்தெம்பும் ஊட்டப்படவேண்டும். சித்த வைத்தியத் துறையை தனிப்பீடமாக்குவதால் அந்த இலக்கை நாடிக் காலடி வைக்க முடியும். சித்த வைத்தியத்தை பேணவும், விஞ்ஞான பூர்வமான வளர்ச்சியை உண்டாக்கவும் இயலும். இதில் எவருக்கும் இரண்டு கருத்து இல்லை என்பதை அவதானிக்க முடிகிறது. இரண்டு கைகளும் சேர்ந்தால்தான் ஓசை பிறக்கும் ஆகையால் மாணவர்களும் நிர்வாகமும் தனித்தனியாக நின்று செயற்படாமல் இருதரப்பாரும் ஒன்றாக கொழும்பு உயர் பீடத்துக்கு அழுத்தம் கொடுத்தால் காரியம் கைகூடும் அல்லவா?

வெளி உலகில்

தமிழர் பிரச்சினை சர்வதேச...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

மனுச் செய்தது

அதே போல ஈழத் தமிழர்களும் கையெழுத்து இயக்கம் ஒன்றை ஆரம்பித்து தமிழர்களின் நிலைப்பாட்டை, இனப்பிரச்சினையின் உண்மையான வடிவத்தை விளக்கித் தங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்குமாறு ஐ.நாவிடம் மட்டுமன்றி சகல உலக நாடுகளிடமும் கேட்டுக் கொள்ளலாம் என்ற கருத்து முகிழ்த்துள்ளது.

சமஷ்டி, பிரிவினை, சுயநிர்ணய உரிமை, ஆகியவற்றை ஒரே கோட்டில் வைத்துப் பார்க்கும் ஸ்ரீலங்கா அரசு, தமிழர்கள் சுதந்திரமாக வாழ அனுமதிக்காது என்பது நிதர்சனமாகத் தெரிகிறது. தமிழர்களது சுதந்திரப் போராட்டத்தை ஓர் உள்நாட்டு விவகாரமாகவே முடி வைத்திருந்து அவர்களை அடக்கி ஆள்வது அல்லது ஒழித்துக் கட்டுவது என்ற கோட்பாட்டுடன் அது இயங்கி வருகிறது; சிங்கள பௌத்த பேரினவாதத்தால் இயக்கப்பட்டு வருகிறது.

சுதந்திரம் மலர...

அதற்கு அனுமதிக்காமல் இனப்பிரச்சனையை சர்வதேசமயப்படுத்தி தமிழர்கள் தமது சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டி அதன் அடித்தளத்தில் இருந்து சுதந்திரத்தை மலர்விப்பதே மார்க்கம்.

★ ★ ★

பிரேமதாசா காலத்தில் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வந்த அமைச்சர் ஹமீது தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிப் பணியில் மீண்டும் ஈடுபடுவிக்கப்படலாம் என்ற கருத்து கொழும்பில் தளிர்த்துள்ளதாக அறிகிறோம். அவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சர் ஹமீது ஓர் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர். தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதில் ஆர்வம் உள்ளவர். பேச்சுக்கள் முறிந்து யுத்தம் தொடங்கிய பின்னரும், பேச்சுவார்த்தை மூலம் யுத்தத்தை நிறுத்திப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற கருத்துடனிருந்தவர். யாழ்ப்பாணத்திலிருந்து பொலிஸ் பிரமுகர்களிடம், மூன்றாவது பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட புலிகள் பிரமுகர்கள் குறித்து அடிக்கடி விசாரித்து வந்தவர். தெரிவுக்குழு மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்று உணர்ந்தவர். எல்லாம் சரிதான்.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து, அவர்களது நியாயமான உரிமைகளை வழங்குவதற்கு அரசைத் தூண்டக்கூடிய வல்லமையும், அதிகாரமும் அவருக்கு உண்டா என்பதே கேள்வி.

தமிழர் தரப்பினர் வெளிநாடுகளில் தமது நியாயமான போராட்டத்துக்குச் சார்பாக நடத்தும் பிரசாரத்தையும், நண்பர்களைத் தேடிக்கொள்வதையும் தடுக்கவே அவர் மீண்டும் வெளியுறவு அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அப்படியிருக்க இனக்கப் பேச்சுக்களில் ஈடுபடுவார் என்பது அவர் விலாங்காக மாறும் நிலையை அல்லவா உருவாக்கும்!

★ ★ ★

பூநகரி - சேரதீவுப் பாதையைத் திறப்பதில் ஆதிக்கங்களான ஐ.நா. தூதரகம் தனது முயற்சியைத் தொடர்வது குறித்து கடந்த வாரம் இப்பத்தியில் எழுதியிருந்தோம். அந்தப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணப்பட்டிருப்பதாகவும், விஜேதுங்காவுடன் கடந்த 13ஆம் திகதியன்று நடத்திய பேச்சுக்களைத் தொடர்ந்து, அடுத்தத் தொடுத்து வேறு பல மாநாடுகளும் சந்திப்புகளும் நடந்திருக்கின்றன.

விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்ட போசனைகளை அரச தரப்பினர் ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு நிலைமை முன்னேற்றம் கண்டிருக்கிறதாம். பூநகரி - சேரதீவு பாதைத் சுற்றாடலை ஐ.நா. திருப்புக்கள் கையாளும் நிலைக்கு அரசு இணங்கும் சாத்தியம் இருப்பதாகவும் அறியப்படுகிறது.

★ ★ ★

யுத்தத்தை நிறுத்தாமல் அமைதியை உருவாக்காமல் கிழக்கிலும், வவுனியாவிலும் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவது என்ற அரசின் திட்டம் விலகி நிற்கும் நல்லதை சுவர்ந்திழுக்கத் தான் எண்ணுவதை கொழும்புத் தமிழ்க் கட்சிகள் உணர்ந்து விட்டன.

அத்தோடு வடக்கு-கிழக்கில் இயல்பு நிலை நிலவுகிறது என்று உலகத்துக்குக் காட்டுவதற்கான ஒரு பிரசார யுக்தி என்ற அவை புரிந்து கொண்டிருக்கின்றன.

அதனால் உள்ளூராட்சித் தேர்தலை பகிஷ்கரிப்பது என்று தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எப் தமிழ்த் காங்கிரஸ் ஆகியன முடிவு செய்திருக்கின்றன.

அவர்களின் இந்த முடிவு அரசாங்கத்துக்குச் சிறந்ததை உண்டாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

சூரிய காந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

தெல்லிநகர் ஸ்ரீ துர்க்காதேவி உற்சவ காலச் சிறப்பம்சம்

நல்லவே நாளும் காண்பர்

தெல்லியம் பதியில் மேவிச்
சகமெலாம் சிறந்தல் வேண்டி
நல்லருள் புரியும் துர்க்கா
தேவியின் விழாக்காண் போர்கள்
வல்வினை நீங்கப் பெற்று
வருதுயர் அறியார் ஆகி
நல்லவே நாளும் கண்டு
நலமுடன் வாழுவார்கள்!

- ம. பார்வதிநாதசிவம்.

பாலைவனத்தை சோலைவனமாக்கும்
பசுமை நிறைந்த மரம் நடுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளங்கலைஞர் மன்ற கலா மண்டபத்தில்

மேடையேறுகிறது

தமிழீழ விடுதலைப் புலிகள்
கலைபண்பாட்டுக் கழக ஆதரவில்

"களத்தில் காத்தான்"

எழுச்சிப் பாடகன் S, G. சாந்தனின் மைந்தன்
பிரபுராஜ் பாலகாத்தானாக காளிகோயிலடி
இளைஞர்களுடன் இணைந்து வழங்கும்

"காத்தவராயன்"

காலம்:-
23-08-93 (நாளை) மாலை 6மணி
பிரவேசம்:- 10 /-, 20 /-

பிரசுர அன்பளிப்பு:-
ஆறுமுகம் சிற்பாலயம்
காளிகோயிலடி, திருநெல்வேலி
(27006)

வேதாகம திருவழிபாட்டு
ஓவியக் கண்காட்சி

இடம்:- யாழ். அரசடிக்கன் அன்னை ஆலயம்
காலம்:- இன்று 22—08—1993 ஞாயிறு
நேரம்:- முற்பகல் 9-00 — பிற்பகல் 5-00 மணிவரை
சிறப்பு நிகழ்ச்சிகள்:-
★ பொம்மலாட்டம், ★ நிலைப்படக்காட்சி,
★ தொலைக்காட்சி
திருமறைக் கலாமன்ற நாடகப் பயிலகம்
வழங்கும்

"நெஞ்சக் கனகல்"

(நவீன நாடகம்)
மாலை 6-30 மணி — இரவு 8-30 மணி இருகாட்சிகள்
சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு:-
பிரவேசம்:- ரூபா 5/-
ஆசனப்பதிவு:- ரூபா 10/-
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்
(இ/5817)

மரண அறிவித்தல்கள்

காசிப்பிள்ளை நடேசு (B.A)

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

கொக்குவில் குளப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான காசிப்பிள்ளை நடேசு (ஓய்வுபெற்ற ஆசிரியர், சிறுப்பிட்டி இந்து கலவன் பாடசாலை) அவர்கள் 21-08-93 சனிக்கிழமை காலமானார்.

இவர் மதிவதனியின் அன்புக் கணவரும், இன்பதோவின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற காசிப்பிள்ளை சுபத்திரையின் மகனும், நடராசா அன்னம்மாவின் மருமகனும், காலஞ் சென்ற சுப்பிரமணியம், பரமேஸ்வரி, முத்துராசா ஆகியோரின் சகோதரரும் நாகரத்தினம் கோவிந்தர் (ஓய்வுபெற்ற அஞ்சல் அதிபர்), கமலாதேவி, சந்திராதேவி (ஆசிரியை கோப்பாய் நாவலர் வித்தியாலயம்), உதயலட்சுமி, பாலயோகினி, சிறிக்குமார் ஆகியோரின் மைத்துனரும், சிவராசாவின் (சாரதா ஸ்ரோர்ஸ் உரிமையாளர் முல்லைத்தீவு) சகலனும், சண்முகேஸ், கௌரீசினியின் பெரியப்பாவும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் இன்று (22-08-93) ஞாயிறு காலை 10-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோப்பாய் மயானத்தைக் எடுத்துச் செல்லப்படும்.

தகவல்
ந. சிவராசா
(சகலன்)
பலாலை கண்ணகை அம்மன் கோவிலடி,
கோப்பாய் வடக்கு.
(27029)

திருமதி
பொன்னம்பலம் செல்லம்மா

அரியாலையைச் சேர்ந்த திருமதி பொன்னம்பலம் செல்லமா 21 08 1993 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும், தருமலிங்கம் (ஓய்வு பெற்ற புகையிரத திணைக்களக் கணக்காய்வாளர்), திருமதி சொர்ணேஸ்வரி குமாரசாமி, சுந்தரலிங்கம் (ஓய்வு பெற்ற பகிரங்க வேலைப்பகுதி உத்தியோகத்தர்), திருமதி புவனேஸ்வரி சரவணமுத்து (நோர்வே), சண்முகலிங்கம் (நீர்ப்பாசன பணிமனை - படகோட்டி, புத்தளம்), திருமதி சௌந்தரராணி தருமராசா (திருச்சி) ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலாவதி, குமாரசாமி (ஓய்வு பெற்ற மதுவரி பணிமனை உத்தியோகத்தர்), சிவபாக்கியம் ஓய்வு பெற்ற ஆசிரியை), சரவணமுத்து (நோர்வே), விமலேஸ்வரி (ஓய்வு பெற்ற பகிரங்க வேலைப்பகுதி படகோட்டி), தருமராசா (திருச்சி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 39/1, ஆனந்தன் வடலி வீதி, அரியாலையில் இருக்கும் இவரது மகளது இல்லத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
பொ. தருமலிங்கம்
பொ. சுந்தரலிங்கம்
(பிள்ளைகள்)
39/1, ஆனந்தன் வடலி வீதி,
அரியாலை.
(27031)

இப்பத்திரிகை நீரு உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, [illegible] இதழின் அச்சகத்தில் 22-08-1993 இல் அச்சிடப்பட்டு வெளியிடப் பெற்றது.

சித்தமருத்துவ மாணவர் கோரிக்கை; யாழ். பல்கலை ஆதரிக்கின்றது!

யாழ்ப்பாணம், ஆக. 22

சித்த மருத்துவத்துறையை தனிப்பீடமாக்க வேண்டும் என்ற சித்த மருத்துவ மாணவரின் கோரிக்கையை யாழ். பல்கலைக்கழக சமூகம் முழுமையாக ஆதரிக்கின்றது.

கலைப்பீடாதிபதி சொல்கிறார்

ஆனால் அவர்களின் கோரிக்கை குறித்து தீர்மானம் எடுக்கும் அதிகாரம் பல்கலைக்கழகத்துக்கு இல்லை— எனினும் பல்கலைக்கழக கலைப்பீடம், பேரவை, மூதவை ஆகியவை இது தொடர்பாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு சிபார்சு செய்திருக்கின்றன.

இப்படிக் கருத்து வெளியிட்டார் யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை.

சித்த மருத்துவத்துறை மாணவர்கள் மேற்கொண்டு வரும் சத்தியாக்கிரகப் போராட்டம் குறித்து எமது தொலைபேசி வினாவுக்கு பதிலளித்தபோதே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

கடந்த காலங்களில் சித்த மருத்துவத்துறையை வளர்க்க மேலதிக ஆசிரியர்களை நியமித்தல், முதுநிலைமானி கற்கைநெறி ஆரம்பித்தல், மருத்துவ மாணவர்களுக்கு சமமான நிதியைப் பெற்றுக் கொடுத்தல் போன்றவற்றை செய்துள்ளோம்.

இந்த மருத்துவத்துறை கலைப்பீடத்தின் கீழ் இருந்த போதும், நடைமுறைச்சாத்தியமான விடயங்களை செய்து கொண்டிருக்கிறோம்.

இதேவேளை அன்றாடக் கல்விச் செயற்பாடுகள் தடையின்றி செயற்படுமாறு மாணவர்களை கோரியுள்ளேன் என்றார். (த-3)

இன்று

மாமுனை- செம்பியன்பற்று ஆரம்ப சுகாதாரக் கவனிப்புத் தொண்டர்களுக்கான பயிற்சி நிகழ்வு விழா செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும். (த-144)

படகுச்சேவை கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஆக. 21

புலோப்பளை பயணிகள் படகுச்சேவையில் ஈடுபட்டுள்ள சகல படகு உரிமையாளர்களையும், ஒட்டுநர்களையும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு புலோப்பளை பயணிகள் படகுத் துறைச் செயலகத்துக்கு தவறாது வருகை தரும்படியும்— வரும்போது, படகுச்சேவையில் பாவிக்கப்படும் வெளியிணைப்பு இயந்திரங்கள், மற்றும் சகல உபகரணங்களையும் கொண்டு வரும்படியும் யாழ். மாவட்ட நிதித்துறை வருவாய்ப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். (இ)

மேலும்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலவசமாக வாதாடுவார்கள்.

★ வழக்குகளுக்கு வெளியிலிருந்தும் சட்டத்தரணிகள் ஆஜராகலாம். ஆனால் அவர்கள் ஒரு வழக்குக்கு 150 ரூபாவுக்கு மேல் அறவிட முடியாது. வழக்கில் ஆஜராவதற்கான கட்டணத்தை நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும் நீதிமன்றம் சட்டத்தரணிகுரிய பணத்தை வழங்கும்.

★ சட்டத்தரணிகள் பலர் தமிழீழ சட்டத்திற்கு அமைய சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்கள். அவர்கள் மட்டுமே வழக்குகளில் வாதாட அனுமதிக்கப்படுவர்.

★ தமிழீழ நீதித்துறைச் சட்டங்களை தேசியத் தலைவர் பிரபாகரனே ஆக்கினார். அவற்றில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமாயின் தலைவரின் அனுமதி பெற்றே மாற்ற வேண்டும்.

★ குற்றவியல் தண்டனைச் சட்டம் (பீனல் கோட்) அடுத்த கட்டமாக உருவாக்கப்பட உள்ளது.

★ நீதிமன்றங்களின் தீர்ப்புகளின் அடிப்படையில் அறிக்கை ஒன்று ஒவ்வொரு 3 மாதத்திற்கும் ஒரு முறை வெளியிடப்படும்.

★ தேசத் துரோக குற்றங்களுக்கு உலகளாவிய ரீதியில் மரண தண்டனையே வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் எமது நடவடிக்கைகளில் அவ்வான குற்றவாளிகள் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்படுவர்.

★ இயக்க உறுப்பினர்கள் காவல்துறையினர் தொடர்பான முறையீடுகள் கிடைத்தால் அவை இராணுவ நீதிமன்றத்தாலேயே விசாரிக்கப்படும்.

★ காவல் துறையினரால் தீர்க்க முடியாத குற்ற வழக்குகள் நீதிமன்றத்திற்கு வரும் ஆனால் காணி வழக்குகள் நேரடியாக நீதிமன்றத்துக்கு வரும்.

★ முக்கிய வழக்குகளுக்கு ஜூரிமார்கள் கடமைகளை நிபுணர் குழு மேற்கொள்ளும் நிபுணர்களாக (ஜூரியாக) அந்த வழக்குடன் தொடர்புடையவர்கள்; [காணி வழக்காயின் நில அளவையாளர், கொலை வழக்காயின் வைத்தியர் போன்றோர்) கடமையாற்றுவர். (அ 9-152)

எகிப்தில்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லாமிய அடிப்படை மதவாதிகளின் ஆட்சியை ஏற்படுத்தினார்.

ஈராக்குடன் நடத்திய நீண்ட யுத்தம் காரணமாக ஈரான் இன்று ஓரளவு சகல துறைகளிலும் பின் தள்ளப்பட்டு விட்டது.

ஈராக்கிலும் மற்றும் சில அரபு நாடுகளிலும் தனது ஆதரவு அரசுகளை உருவாக்கும் ஈரானது லட்சியங்கள் தற்போது செயல் இழந்த நிலையிலேயே உள்ளன.

எனினும் எகிப்திலே முபாரக் அரசுக்கு எதிரான இஸ்லாமிய மத அடிப்படைவாதிகளின் தற்போதைய போராட்டத்துக்கு ஈரானின் உதவி இருக்காது என்று சொல்லமுடியாது.

இஸ்லாமிய தீவிரவாதிகளுடன் சமரசத்துக்கு வராது அவர்களை ஒழித்துக்கட்டும் முபாரக்கின் போக்கு அவரின் அரசியல் எதிர்காலம் குறித்து கேள்விக்குறியை எழுப்புகிறது. ★

விக்னா

கல்வி நிறுவனம்
95 புதியபிரிவு II
புவியியல்
திரு. குணராசா
9.00 — 10.00
தமிழ்
திரு. குழந்தை
7.00 — 8.00
ஆரம்பம்: 21 - 8 - 93

வெள்ளி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பனை மரங்கள் கூப்பட பயன்தரு மரங்கள் பல முறிந்தன. அத்துடன் கரையோரப் பகுதிகளில் இருந்த பிரங்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.

அதே சமயம் வெள்ளி இரவு காரைநகர் இராணுவ முகாமில் இருந்த பொன்னாலை, மூளாய்ப் பகுதிகளை நோக்கி ஷெல்தாக்குதல்கள் நடத்தப்பட்டன. (இ-13-15)

நினைவஞ்சலி

அமரர்
காத்தியேசு இராசையா
தோற்றம்: 16 - 4 - 1919
மறைவு: 3 - 3 - 1991

அமரர் திருமதி
இராசையா ஞானம்மா
தோற்றம்: 13 - 9 - 1928
மறைவு: 23 - 7 - 1993

திதி : 22 - 8 - 1993

ஆலம் விழுதுகள் போல் உறவு ஆயிரம் வந்தும் என்ன? வேர் என நீவிர் இருந்திர். அதில் நாம் வீழ்ந்து விடாதிருந்தோம். மெழுகுவர்த்தி போல் உங்களை உருக்கி எங்களுக்கு ஒளி கொடுத்தீர்கள். ஆறாது ஆறாது அழுதாலும் தீராது ஆனாலும் வழி என்ன தாயே.

உங்கள் பிரிவால் வாடும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
சகோதரிகள், உறவினர்கள்,
நண்பர்கள்.

தகவல்: அம்மா கோவிலடி,
இணுவில் கிழக்கு.
(27030)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org